2nd March 1959]

Iron, steel and pig iron

* 502 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the quantity of iron and steel and pig iron that was allotted for various purposes from April 1957 to October 1958; and

(*b*) of this, how much is for—

(i) Small-scale industries;

(ii) Agriculture; and

(iii) for construction purposes?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The following quantities of iron and steel and pig iron were allotted to this State from April 1957 to October 1958 :—

Government Development Schemes quota.—Three thousand and six hundred (3,600) tons.

Steel Processing Industries quota.—Four thousand, eight hundred and seventy-two (4,872) tons.

Small Scale Industries quota.—Three thousand, six hundred and sixty-six (3,666) tons.

Agricultural quota.—Four thousand, six hundred and twenty (4,620) tons.

Non-Agricultural quota.—Nine thousand, four hundred and eight (9,408) tons.

Pig Iron quota.—Three thousand, five hundred and thirty four point five (3,534·5) tons.

(*b*) The following are the total quantities allotted for the quotas mentioned below from April 1957 to October 1958 :—

(i) Small Scale Industries.—Three thousand, six hundred and sixty-six (3,666) tons.

(ii) Agriculture.—Four thousand, six hundred and twenty (4,620) tons.

(iii) Construction purposes (Non-agricultural quota).—Nine thousand, four hundred and eight (9,408) tons.

Sri K. SATTANATHA KARAYALAR : ஸார், நாம் மொத்தம் எவ்வளவு மத்திய சர்க்காரிடம் கோரினோம் ? அதிலே நமக்கு எத்தனை சதமானம் கிடைத்தது. 11–30 a.m.

The Hon. Sri R. VENKATARAMAN : சாதாரணமாக நமது கோரிக்கை இதைப் போல இன்னும் ஒரு மடங்கு அதிகமாக இருக்கும்:

Sri K. B. S. MANI : இப்போது நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய இரும்பு, எஃகு, தேனிரும்பு முதலியவைகள் நம் மாகாணத்தில் செய்ய வேண்டிய விவசாயக் கருவிகளுக்கும் மற்ற சாமான்களுக்கும் போதுமானதாக இல்லை—பற்றாக்குறையாக இருக்கிறது—என்று எந்தெந்தத் தொழிற்சாலைகளிலிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்து அதிகமாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் ? அப்படியிருந்தால் அதன் மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

THE HON. SRI R. VENKATARAMAN : தேனிரும்பைப் பொருத்த அளவில், நமக்கு வேண்டிய அளவு கிடைத்திருக்கிறது. வேண்டிய அளவு கிடைக்கவில்லை என்ற புகார் நின்று விட்டது. இரும்பு, எஃகு இவைகளைப் பொருத்த அளவில் நமக்கு வேண்டிய அளவு கிடைக்க வில்லை. இரண்டு ஸ்டீல் பிளாண்டுகளும் உற்பத்தி செய்யத் துவங்கியவுடன் நமது பிரச்னை தீர்ந்து விடும் என்று நினைக்கிறேன்.

SRI C. NATARAJAN : அமைச்சர் அவர்கள் கொடுக்கும் புள்ளி விவரத்திலிருந்து விவசாயக் கருவிகள் செய்வதற்குக் குறைந்த அளவு இரும்பு கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் கட்டிடங்கள் கட்டுவதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இரும்பு கோட்டாவிலிருந்து எடுத்து இதற்கு இன்னும் அதிகமாக ஒதுக்கிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது மத்திய அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது. இதைக் குறைக்க வேண்டுமென்று நினைக்கவில்லை. அக்ரிகல்சரல் கோட்டாவில் அதிகம் வேண்டுமென்று எழுதியிருக்கிறோம்.

SRI A. A. RASHEED : May I know how much of the steel allotted was from the indigenous source and how much from the imported source and is it a fact that the imported material was more expensive than the indigenous material?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put. In fact the information will be available only from the Centre and not from the State.

SRI A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, விவசாயத்திற்காக ஜில்லா விவசாய அதிகாரி அவர்கள் சிபார்சு செய்கிற அளவு டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் இரும்பு கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? விவசாயத்திற்குத் தேவையான அளவு இரும்பு கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : நமக்குத் தேவையான இரும்பு, எஃகு கிடைக்கவில்லை என்று ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். மத்திய சர்க்காருக்கு இன்னும் இந்த ராஜ்யத்திற்கு அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த ராஜ்ய சர்க்கார் எழுதியிருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, நமக்குக் கிடைத்த இரும்பு, எஃகு கோட்டாவானது, நாம் கேட்டதில் பாதி அளவு தான் மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்திய சர்க்கார் வட நாட்டிலுள்ள இதர மாகாணங்களுக்கு கேட்ட அளவு ஒதுக்கி விட்டு, தென்னாட்டைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN: கொஞ்சம்கூட உண்மையில்லை. அந்தந்த மாகாணத்தைத் தனித் தனியாக எடுத்துப் பார்த்தால் அவர்களும் அந்த மாதிரித் தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : கனம் சபாநாயகர் அவர்களே, அம்பர் சர்க்கா செய்வதற்குப் போதிய இரும்பு கிடைக்காததால், போதிய அளவு உற்பத்தியாகவில்லை என்று சொன்னார்கள். அடுத்த ஆண்டிலாவது அம்பர் சர்க்காவிற்குப் போதிய இரும்பு கிடைக்கச் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : பிலாய், ரூர்கேலா ஸ்தாபனங்கள் இரண்டும் இரும்பு, எஃகு உற்பத்தி செய்யத் துவங்கியவுடன் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும்.